பக்கங்கள் : எட்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 27 வியாழக்கிழமை(13.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 17



நேற்று யாழ். பொது நூல் நிலைய மண்டபத்தில் சர்வமதத் தலைவர்களின் சர்வதேச மாநாட்டின் முதலாவது அமர்வுக்கு எலா காந்தி அம்மையார் தலைமை வகித்திருக்க, கம்போடியாவைச் சேர்ந்த அதிபூஜா ரெப் வொங், இலங்கை ஆயர்கள் சங்கத் தலைவர் கலாநிதி ஜோசப் வியன்னி பெர்ணாண்டோ, மௌலவி அல்ஹாஜ் நியாஸ் முகம்மது மற்றும் நல்லை ஆதீன குருமுதல்வர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இரண்டாவது படத்தில ஜெயவத்தனபுர பல்கலைக்கழக வேந்தர் பென்வெல்ல விமல ரத்ன தேரர் உரையாற்றுகிறார்.

மூன்றாவது படத்தில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி உரையாற்றுகிறார் அருகில் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசப்பும் காணப்படுகின்றார். *(படங்கள் : வரன்)*

## சமாதானச் செயற்பாடு முன்னேற்றம் காண துணிச்சலும் மனச்சாட்சியும் அவசியம்

### சர்வமத மாநாட்டில் அகாஷி

யாழ்ப்பாணம்,டிசெ.13

சமாதானச் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக அமையவேண்டும். அதனை நோக்கி நகர்வதற்கு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் துணிச்சலும் மனச்சாட்சியும் அவசியம்.

மிதவாதிகள் அனைவரும் தமது மனச்சாட்சியின் பிரகாரம் செயற்பட்டு சமாதானத் தேடல் செய்தால் அதனைக் காண்பது கடினமானதல்ல.

இது விடயத்தில் பல்வேறு சமயத் தலைவர்களும் சமாதானம் குறித்து ஆராய்வதற்குக் கூடியுள்ளமை மிக நல்ல சகுனமாகும்.

ஜப்பானின் விசேட தூதர் யசூசி அகாசி நேற்று இங்கு நடைபெற்ற சர்வமதத் தலைவர்களின் சர்வதேச மாநாட்டில் பிரதான உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொது நூல்நிலைய மண்டபத்தில் சர்வதேச சமய மாநாடு நேற்றுக்காலை ஆரம்பமானது.

மேற்படி மாநாட்டில் சுமார் 40 சமயத் தலைவர்கள் கலந்துகொண்டனர். வெளி

(07ஆம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஹக்கீம் மற்றும் நால்வர் அரசிலிருந்து விலகினர்

## 'பட்ஜெட்'டை ஒட்டிய இறுதிநேரத்தில் தாவல் ஆரம்பம்

கொழும்பு,டிசெம்பர்13

வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நாளை இடம்பெற இருக்கையில் கடைசி நேர அணிதாவும் நாடகம் நாடாளுமன்றத்தில் அரங்கேறத் தொடங்கிவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் எஞ்சியிருந்த ஆறு எம்.பிக்களில் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட நால்வர் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் பதவிகளைத் துறந்துவிட்டு அரசுத் தரப்பிலிருந்து எதிர் அணிக்கு நேற்று மாறினர்.

நேற்று நாடாளுமன்றம் கூடிய பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் சபையில் அறிக்கை ஒன்றை வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், தாம் உட்படத் தமது கட்சியின் நான்கு எம்.பிக்கள் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளைத் துறந்துவிட்டு அரசுப் பக்கத்திலிருந்து எதிரணிக்குச் செல்கின்றனர் என அங்கு அறிவித்தார்.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளர் ஹசனலி, தேசிய அமைப்பாளர் பஷீர் சேகுதாவூத் மற்றும் பைஸல் காசிம் ஆகியோரே அரசுத் தரப்பிலிருந்து எதிரணிக்கு மாறினர்.

அவர்கள் எதிரணிக்கு மாறிய போது எதிரணியில் அமர்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அவர்களைப் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றனர். (07ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் கடற்கொந்தளிப்பு

முல்லைத்தீவு,டிசெ.13

முல்லைத்தீவுக் கடலில் கடந்த இரண்டு நாள்களாக கடும் கொந்தளிப்பு நிலை தொடர்கிறது.

கடுமையான கடற்கொந்தளிப்பினால் நேற்று மீனவர்களின் படகு கவிழ்ந்ததில் வெளியிணைப்பு இயந்திரம் சேதமடைந்துள்ளது. படகில் சென்றவர்களைக் காப்பாறச் சென்றோர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைச் சேர்ந்த றஞ்சித் என்பவர் நேற்றுமுன் தினம் கடலில் போட்ட நண்டு வலையை எடுக்கச்சென்றபோது பெரிய அலை படகைக் கவிழ்த்தது. (அ)

## அரசிலிருந்து வெளியேற ஆறுமுகன் அணி தயார்; முத்துசிவலிங்கம், செல்லச்சாமி இழுத்துப் பிடிப்பு!

கொழும்பு,டிசெ.13

நாளை வரவு - செலவுத் திட்ட வாக்கெடுப்புக்கு முன்னர் அமைச்சர் பதவியைத் துறந்து, அரசிலிருந்து வெளியேற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தயார். ஆனால், பிரதி அமைச்சர்கள் முத்து சிவலிங்கமும், செல்லச்சாமியுமே இ.தொ.கா. தலைமையை அரசைவிட்டு வெளியேறாமல் இழுத்துப் பிடிக்கின்றனர்.

- இதனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போது அரசைக் கவிழ்ப்பது தொடர்பான

(07ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அகதிமுகாம்களில் தீவிர சோதனை நடவடிக்கை

சேலம்,டிசெ.13

கடற்புலி உறுப்பினர்கள் உட்பட புலிகளின் முகவர்கள் எனத் தெரிவிக்கப்படும் சிலர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தமிழகத்தில் அதிரடியாகக் கைது செய்யப்பட்ட நிலையில், இங்கிருக்கும் அகதி முகாம்களில் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழக அகதி முகாம்களுக்கு கடந்த 3 மாத காலத்துக்குள் வந்து சென்ற புதிய நபர்கள் யார் யார்? என்ற விசாரணைகளில் 'கியூ' பிரிவுப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

முகாம்களிலுள்ள அகதிகள் வேலைக்குச்

(07ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் மட்டு. எம்.பிக்கள் மூவரின் உறவினரைத் துணைப்படை கடத்தியது

### 'பட்ஜெட்'டை எதிர்க்கக் கூடாது என நிபந்தனை விதிப்பு

கொழும்பு, டிசெ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பிக்கள் மூவரின் நெருங்கிய உறவினர்கள் மூவர் நேற்று முன்தினம் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

அரசுப் படைகளுடன் இயங்கும் துணைப் படையான பிள்ளையான் குழுவினராலேயே இவர்கள் கடத்தப்பட்டிருக்கின்றனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருக்கின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசின் வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நாளை நடைபெறும்போது அதில் பங்குபற்றக் கூடாது என்று இந்த மூன்று எம்.பிக்களுக்கும் அச்சுறுத்தல் விதிக்கும் வகையில் இந்த ஆட்கடத்தல்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

இதே வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு (07ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளே கடத்தினர்; கெஹெலிய சொல்கிறார்

கொழும்பு,டிசெ.13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்களை விடுதலைப் புலிகளே கடத்தி உள்ளனர் என தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறினார்.

நேற்று நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே

(07ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இளவாலை ஆனைவிழுந்தான்

**விக்கின விநாயகர் தேவஸ்தான**

*கஜமுக சங்கார விஞ்ஞாபனம்*

நாளை (14.12.2007) வெள்ளி மாலை 3 மணிக்கு கஜமுக சங்காரம் நடைபெறும்.
15.12.2007 சனிக்கிழமை பெருங்கதை உற்சவம் பி.ப.3 மணிக்கு.
அனைவரும் வந்து விநாயகப் பெருமானின் அருளைப் பெறுக.
விழா உபயகாரரும் இ.பாலச்சந்திரக் குருக்களும் (ஆதீன குரு).
(68860)



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/ இடைக்காடு மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றி 01.11.2007 அன்று கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றுள்ள V.S.சித்திரவேல் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**உயர்திரு V.S. சித்திரவடிவேல்**
(B.A. HONS, Dip. in Ed. SLPS-I)

ஆ.விமலேந்திரன்,
ஆ.சகுந்தலா,
அல்வாய்கிழக்கு.
(68900)



**வாடிக்கையாளர்களே...!**

**அன்பர்களே...!**

**புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை**

- ★ வீட்டுப் பாவனைக்கான தளபாடங்கள்
- ★ அலுவலகப் பாவனைக்குரிய தளபாடங்கள்
- ★ அனைத்து விதமான மெத்தை வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

வெளிநாட்டிற்கான பொதிகள், ஆவணங்கள் குறைந்த கட்டணத்தில் குறுகிய நாள்களில் உத்தர வாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
T.P.: 0773583879, 0115620094.
**ஏசியன் தளபாட நிலையம்,**
133, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/64694)



**ஆண்டு ஒன்று நினைவஞ்சலி**



லயன்
**சோமேஸ்வரி கைலாசநாதன்**
(ஓய்வுபெற்ற அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)

உதிப்பு 11.09.1936 | உதிர்வு 24.11.2006

திதி: வளர்பிறை சதுர்த்தி (13.12.2007)

'பத்தினியே உன் போல் இத்தரை மீதில் உற்றவர் யார் உளார்'
ஆயிரம் ஆயிரம் மாணவர் செல்வங்களை அர்ப்பணிப்புடன் உய்விக்கும்
வழிகாட்டி வளம் பலபெருகச் செய்து நாட்டின் நல்லன புரியும்
நற்பிரசைகளாக உருவாக்கிய இலட்சியப் பெண்மணியே!
இறைபாதம் அடைந்த உங்களை நினைவு அஞ்சலி செய்கிறோம்.

'முருகோதயம்', இணுவில். (68857) குடும்பத்தினர்.



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம் 20-04-1927
மறைவு 24-11-2006

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று 13.12.2007 வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.
(68907)

**அமரர் வைத்திலிங்கம் நல்லையா**
(ஈஸ்வரன் ஸ்ரோர்ஸ், ஈஸ்வரன் மில், ஈஸ்வரன் பேக்கரி உரிமையாளர்)

கந்தமலை,
ஈஞ்சடி.
குடும்பத்தினர்.



**தேவை**

British Business School இற்கு ஆங்கிலத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியைகள் தேவை; சுன்னாகம், மானிப்பாய், நல்லூர் சூழலுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.
140, Temple Road, Jaffna T.P: 5796.



**WANTED**

ENGLISH TRAINED TEACHER FOR SPOKEN & GRAMMAR CLASSES CONDUCTED BY AN INSTITUTE IN JAFFNA.

CALL: 021 222 8193

ADDERESS:
NO. 25, SOMASUNDARAM AVENUE,
CHUNDIKULI,
JAFFNA.
(68909)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**



தோற்றம் 12 * 05 * 1965
மறைவு 13 * 11 * 2007

**கந்தையா ஸ்ரீரங்கநாதன்**

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.12.2007) வியாழக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கமலபதி,
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.
குடும்பத்தினர்.


## ஆங்கில பயிற்சிக் கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

தீவகக் கல்வி வலய ஆரம்பக் கல்வி ஆசிரியர் களுக்கு இன்று வியாழக்கிழமை நடைபெறவிருந்த 10 நாள் ஆங்கிலப் பயிற்சிக் கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

இக்கருத்தரங்கு எதிர்வரும் 17ஆம் திகதி கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் ஆரம்பமாகும் என்றும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் வலயப் பணிப்பாளரர் ஏ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். (அ)

## ஆயுள்வேத வைத்திய நிலையத்துக்கு மருந்துகள்

சுழிபுரம்,டிசெ.13

சுழிபுரம் ஆயுள் வேத வைத்திய சாலைக்கு போதிய முக்கியமான மருந்து வகைகள் இப்போது வந்து சேர்ந்துள்ளன. நோயாளர்கள் தினமும் வைத்திய சாலைக்கு வருகை தந்து சிகிச்சை பெற்றுச் செல்வதைக் காணமுடிகிறது. சில நாள்களாக பிரதான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவியது. (அ-20)


தென்னிந்தியத் திருச்சபை - யாழ்.பேராயம்
அமெரிக்கன் இலங்கை மிஷன்
புங்குடுதீவு - வேலணை திருச்சபை
ஆகிய பகல் பராமரிப்பு நிலையங்களில்
**ஒளிவிழா**

**காலம்:** 14.12.2007 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி.
**இடம்:** வேலணை திருச்சபை

**காலம்:** 17.12.2007 திங்கட்கிழமை முற்பகல் 10 மணி.
**இடம்:** புங்குடுதீவு திருச்சபை

★ இவ்விரு நிகழ்விற்கும் சிறப்பு விருந்தினராக **பேராயர் அருட் கலாநிதி D.S. தியாகராஜா** அவர்களும் **திரு மு.நந்தகோபாலன்** (பிரதேச செயலர், பிரதேச செயலகம், வேலணை) அவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.
இவ்விரு திருச்சபைகளையும் சேர்ந்த அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்திரு. S. அன்டனி, சேகரக்குரு. (68918)
**திரு.A.R. அம்பலவாணர்,** நிர்வாகப் பொறுப்பாளர்.



**ஏல விற்பனை**

நல்ல நிலையிலுள்ள பாவித்த
**100 இரும்புக் கதிரைகள்**
16.12.2007 ஞாயிற்றுக்கிழமை நண்பகல்12 மணிக்கு
ஏலத்தில் விடப்படவுள்ளன.

ஏலத்தில் பெற விரும்புவோர் கைதடி கிழக்கு சனசமூக நிலைய நிர்வாகத்தோடு தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகம்,
*கைதடி கிழக்கு சனசமூக நிலையம்.*
(68883)



**இதோ,**

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான, பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும் விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும் நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!

100% இளமையையும் வலிமையையும் தரும்
**சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்**
யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:-
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:- 6382) AR/PR/No: 228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
**சிவா நறுமணப்பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/54611)
(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)



**31ஆம் நாள் நினைவஞ்சலி**



அமரர் **வேலுப்பிள்ளை நவரத்தினம்**

தோற்றம் 20.08.1937
மறைவு 13-11-2007

திதி: பூர்வபக்க சதுர்த்தி

அகிலமதில் நாமுயர வழிகள் செய்தீரே
தரணியில் நாம் வாழ வளம் பல சேர்த்தீரே
எமது நல் வாழ்விற்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வமே, நாள்கள் முப்பத்தொன்று ஆயினும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது. (68913)

புளியடி ஞானவைரவர் கோயிலடி.
காசிவாசி செந்திநாதையார் வீதி,
ஏழாலை கிழக்கு, ஏழாலை. (68913)

தகவல்:
குடும்பத்தினர்.



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



மலர்வு 13 * 05 * 1930
உதிர்வு 13 * 11 * 2007

**திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா**

13.11.2007 அன்று இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு பல வழிகளில் உதவிபுரிந்த அன்புள்ளங்களுக்கு எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் இல்லத்தில் இன்று (13.12.2007) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.
க. நாகேந்திரம் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டைதீவில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலையை சந்தைப்படுத்தமுடியாது தேக்கம்

### விவசாயிகள் பெரும் நிதி நெருக்கடிக்குள்

யாழ்ப்பாணம்,டிசெ.13

கடந்த வருடம் உற்பத்தி செய்யப்பட்டு பதப்படுத்தப்பட்ட புகையிலையை இது வரை சந்தைப்படுத்தமுடியாததால் மண்டைதீவைச் சேர்ந்த புகையிலைச் செய்கையாளர்கள் மிகவும் நிதி நெருக்கடியில் இருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் இந்த வருடம் புகையிலைச் செய்கையை மேற்கொள்வதற்கு முதலைப் பெற்றுக்கொள்ள இயலாது பெரும் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கப்பல்மூலம் தென் இலங்கைக்குப் புகையிலையை ஏற்றுமதி செய்வதற்கு புகையிலை வியாபாரிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். இதனால் 'பாடம்' பண்ணப்பட்ட புகையிலை வீடுகளிலேயே தேங்கிக் கிடக்கிறது.

இந்தப் பகுதியில் உள்ள வயல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமற்று பாழடைந்து போயுள்ளன. புகையிலை செய்கை மற்றும் உப உணவுப் பொருள்களின் உற்பத்தியில் மட்டுமே மீளக்குடியமர்ந்தவர்கள் கவனம் செலுத்தி வருகின்றனர். பிரதான உற்பத்திப் பொருளாகப் புகையிலையை மட்டுமே மேற்கொள்கின்றனர்.

இங்கு பயிராகும் புகையிலை சுருட்டுத் தொழிலுக்குப் பொருத்தமற்றது. தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்யப்படுவதே வழமை. இந்நிலையில் பெரும் முதலிட்டு அறுவடை செய்யப்பட்ட புகையிலை தேங்கிக் கிடப்பதால் செய்கையாளர்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

மேலும் பருவமழை பிந்தியதுடன் இந்த வருடம் குடாநாட்டில் பெறப்பட்ட மழையளவிலும் பார்க்க மிகக் குறைந்த ளவே தீவுப் பகுதியில் பெய்துள்ளது. இங்குள்ள கிணறுகளின் உவர்த்தன்மை நீங்குவதற்கு போதுமானதாக அது இல்லை. கிணறுகளின் நீர் மட்டம் போதியளவிற்கு உயரவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள செய்கையாளரின் நிலையைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-88)

## மாவட்டத்தில் 37 திட்டங்களுக்கு 4.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்.மாவட்டத்தில் 9 பிரதேச செயலர் பிரிவுகளில் 37 அபிவிருத்தித் திட்டங்களுக்கென நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச்சந்திரன் 4.8 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து மேற்படி நிதி ஒதுக்கீட்டை அவர் மேற்கொண்டுள்ளார்.

சங்கானையில் ஓர் அபிவிருத்தித் திட்டத்திற்கென ஒரு லட்சம் ரூபாவையும் சாவகச்சேரியில் 4 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 3 லட்சம் ரூபாவையும் யாழ்ப்பாணத்தில் 3 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 3 லட்சத்து 50ஆயிரம் ரூபாவையும் - கோப்பாயில் 19 அபிவிருத்தித் திட்டங்களுக்கென 29 லட்சத்து 50ஆயிரம் ரூபாவையும் நல்லூரில் 3 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 5 லட்சத்து 25ஆயிரம் ரூபாவையும் பருத்தித்துறையில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவையும் -

சண்டிலிப்பாயில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாவையும் தெல்லிப்பழையில் ஓர் அபிவிருத்தித் திட்டத்திற்கு 50ஆயிரம் ரூபாவையும் உடுவிலில் 2 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒதுக்கியுள்ளார். (202)

## வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை அதிகரிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.13

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளது.

கடந்த ஆடிப்போக வெங்காயச் செய்கையில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தை உரிய வீலையில் விற்கமுடியாது மிகவும் மலிவான விலையில்- குறைந்த விலையில் விற்கவேண்டிய நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது.

வெங்காய உற்பத்தி சீசன் குறைந்த தற்போதைய நிலையில் ஏற்கனவே களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்ட வெங்காயத்தை விவசாயிகள் விற்று வருகின்றார்கள்.

முன்னர் ஒரு கிலோ 10 ரூபா, 15 ரூபா என்று விற்பனை செய்யப்பட்ட வெங்காயம் தற்போது சந்தைகளில் 40 ரூபா முதல் 50 ரூபா வரை தரத்தைப் பொறுத்து விற்கப்பட்டு வருகின்றது.

''வேதாளக் காய்'' என்றழைக்கப்படும் பெரிய வெங்காயம் கிலோ 50 ரூபா முதல் 60 ரூபா வரை விற்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை - தைப்போக வெங்காயச் செய்கைக்கு விதை வெங்காயமாக பயன்படுத்துவதற்காக வெங்காயத்தை விவசாயிகள் கொள்வனவு செய்து வருகின்றனர். விதை வெங்காயம் கையில் இல்லாத விவசாயிகள் பலர் நடுகைக்காக விதை வெங்காயத்தை கொள்வனவு செய்து வருவதை அவதானிக்க முடிகிறது. இதன்காரணமாகவும் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகின்றது. (202-135)

## தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர் கவனத்திற்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.13

தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கான டிசம்பர் மாத ஓய்வூதிய வவுச்சருடன் அடுத்த வருடத்திற்குரிய ஓய்வூதிய தினங்களின் விவரங்களும் வாழ்க்கை அத்தாட்சிப் பத்திர விண்ணப்பமும் பிரதேச செயலக ஓய்வூதிய கிளையினரால் ஓய்வூதியம் பெறும் வங்கிகளுக்கு அனுப்பப்படவுள்ளன.

வாழ்க்கை அத்தாட்சிப் பத்திரத்தை 2008 ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் அந்தப் பிரிவு கிராம அலுவலரால் உறுதிப்படுத்தி ஜனவரி பதினைந்தாம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் செ.ஶ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

## வலி.கிழக்கில் உள்ள மழைநீர்த்தொட்டிகளைப் பார்வையிட கிராமசேவையாளர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலக பிரிவிலுள்ள மழைநீர்த்தொட்டிகள் யாவும் அந்தந்தப் பிரிவு கிராமசேவையாளர்களால் பார்வையிடப்படவேண்டும்.

இவ்வாறு பிரதேச செயலர் கிராம சேவையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

மழைநீர்த்தொட்டிகளைப் பார்வையிடுவதோடு அவை பற்றிய அறிக்கையையும் தமக்குச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், புத்தூர் கிழக்கு, வாதரவத்தை ஆகிய இடங்களிலுள்ள மழைநீர்த் தொட்டிகளைப் பிரதேச சபையினர், கோட்டக்கல்வி அலுவலகத்தினர், சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் பார்வையிடவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)




### குருநகர் பொதுநூலகம் வழமையான சேவையில்

குருநகர்,டிசெ.13

குருநகர் கடற்கரை வீதியில் அமைந்துள்ள யாழ்.பொதுசன நூலக குருநகர் கிளை திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை திறந்திருக்கும் என நூலகப் பொறுப்பாளர் எஸ்.சூரி தெரிவித்தார்.

இங்கு நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி, சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதி ஆகியவை இயங்கி வருவதுடன் மாணவர்கள் அமர்ந்து தமது பாடங்களை மீட்பதற்கும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-51)

### மகாபொல புலமைப்பரிசில்

யாழ்ப்பாணம்,டிசெ.13

யாழ்ப்பாண உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் முதலாம் வருட மாணவர்களில் ஒரு தொகுதியினருக்கான மகாபொல புலமைப் பரிசில் கிடைக்கப்பெற்றுள்ளன என நிறுவனத்தின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

எனவே மாணவர்களை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார். (202)

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம்

யாழ்ப்பாணம்,டிசெ.13

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 7 மணிமுதல் மூல மூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து திருவெம்பாவை ஓதல், வசந்த மண்டபப் பூசை, சுவாமி திருவீதி உலா வருதல் என்பனவும் இடம்பெறும்.

உற்சவத்தில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு பஞ்சரத பவனியும் அன்று இரவு 2 மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும் மறுநாள் அதிகாலை 5 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் இடம்பெற்று பிற்பகல் 3 மணிக்கு திரு ஊடல் உற்சவமும் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இந்த உற்சவங்களை முன்னிட்டு யாழ். நகரில் இருந்து ஆலயம் வரை நேரடி பஸ் சேவைகள் தினமும் இடம்பெற உள்ளன. ஆலயச் சூழலில் உள்ள மடாலயங்களில் அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

திருவாதிரை உற்சவத்தின் இறுதி மூன்று தினங்களும் மணிவாச்கர் சபையினால் திருவாசக விழாவினை நடத்துவதற்கான விரிவான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதுடன் விழாவில் கலாநிதி சிவஸ்ரீ க. வைத்தீசுவரக்குருக்களினால் பதிப்பிக்கப்பட்ட 'ஐயனார் புராணம்' நூல் வெளியீடும் இடம்பெற உள்ளது. பண்டிதர் க.மயில்வாகனனார் பாடிய இந்த நூலினை மணிவாசகர் சபை வெளியீடு செய்கின்றது. (202-250)

## பருத்தித்துறை, காரைநகரில் 'கமநெகும' திட்டத்தில் 12.2 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.13

கிராம எழுச்சித் திட்டத்தின் (கமநெகும) கீழ் பருத்தித்துறையில் 35 லட்சம் ரூபா செலவிலும் காரைநகரில் 87 லட்சம் ரூபா செலவிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பருத்தித்துறை ஓடக்கரை சனசமூக நிலையம் 8 லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. பொலிகண்டி வெள்ள வாய்க்கால் 8 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. வட்டுவனை கந்தமுருகேசனார் சனசமூக நிலையமும் முன்பள்ளியும் 4 லட்சம் ரூபா செலவிலும் தமிழ் அருவி சனசமூக நிலையம் 4 லட்சம் ரூபா செலவிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

பூவற்கரை முன்பள்ளிக்கும் சக்கோட்டை முன்பள்ளிக்கும் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. புலோலி கரகம்பன் மயானம் 2 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. துரையா மூலை இலங்கேஸ்வரன் சனசமூக நிலையத்திற்கும் குரும்பைகட்டி சனசமூக நிலையத்திற்கும் சுமார் 2 லட்சம் ரூபாவுக்கான நூல்கள், தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

தும்பளையில் 3 லட்சம் ரூபா செலவில் நீர்தாங்கியொன்று நிர்மாணிக்கப்பட்டு குடிநீர் வசதி செய்யப்படவுள்ளது. மாதனைப் பிரதேசத்தில் உள்ள இரண்டு பொதுக் கிணறுகளும் திருத்திப் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகரில் மருதபுரம் வீதி புனரமைப்பதற்கு 15 லட்சம் ரூபாவும் கொட்டைப் புலம் கிராம மின்விநியோகத்திற்கு 7 லட்சம் ரூபாவும் வியாவில் கிராமத்திற்கான மின்விநியோகத்திற்கு 8 லட்சம் ரூபாவும் வியாவிலில் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கு 15 லட்சம் ரூபாவும் கல்லந்தாழ்வில பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கு 4 லட்சம் ரூபாவும் செலவிடப்படவுள்ளன.

கல்லந்தாழ்வு கிராமத்திற்கு மின்சார விநியோகத்திற்கு 10 லட்சம் ரூபாவும் கல்லந்தாழ்வு வீதி புனரமைப்பதற்கு 10 லட்சம் ரூபாவும் அல்வின் வீதி புனரமைப்பதற்கு 10 லட்சம் ரூபாவும் சடையாளி கிராம மின்சார விநியோகத்திற்கு 8 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (202-250-218)





யாழ்.மாவட்ட மட்ட சிறுவர் அரங்க நிகழ்வு அண்மையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி கலையரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் மேடையேற்றப்பட்ட சிறுவர் நாடகம் ஒன்றின் [illegible] பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் [illegible] ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மூன்று டாக்டர்கள் நியமனம்

வடமராட்சி,டிசெ.13

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு தென்பகுதியைச் சேர்ந்த மூன்று டாக்டர்கள் நியமனம் பெற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ்.குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளுக்கென புதிதாக நியமனம் பெற்ற 60 டாக்டர்களில் இம்மூவரும் அடங்குவர். (202-160)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் இரண்டாவது பிரஜைகள் அல்லர்; சகல உரிமைகளும் அவர்களுக்கு உண்டு

## அநீதி இழைக்கப்பட்டால் தொடர்புகொள்ளக் கேட்கிறார் ஜயலத்



கொழும்பு,டிசெ.13

இலங்கைத் தமிழ் மக்களை இரண்டாந் தரப் பிரிஜைகளாகக் கொள்வது எந்தவிதத்திலும் நியாயமாகாது. தமிழ் மக்களுக்கு முஸ்லிம், சிங்கள மக்களுக்குரிய அனைத்து உரிமைகளும் உண்டு.

இவ்வாறு ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவிக்கின்றார்.

மீண்டும் அப்பாவித் தமிழ் மக்கள் எந்தவித நியாயமான காரணங்களும் இன்றிப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக அரசால் கைதுசெய்யப்படுதல், தடுத்து வைக்கப்படுதலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த பல தினங்களாக 3000இற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டும் தடுத்து வைக்கப்பட்டுமுள்ளனர். இதில் கணிசமானோர் மலையகத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தமிழர்களாக இருப்பது அவர்களது தவறா?? ஏன் தமிழர்களுக்கு தமது நாடான இலங்கையில் விரும்பிய இடங்களுக்குச் சென்று வருவதற்கு, வசிப்பதற்கு உரிமை இல்லையா?? என்று நான் நடைமுறை அரசிடம் கேள்வி தொடுக்கின்றேன்.

1994ஆம் ஆண்டு நான் பாராளுமன்றத்திற்குத் தெரிவானதிலிருந்து இன்று வரை நான் தமிழ் மக்களுக்காக, அவர்களது உரிமைக்காகக் குரல் கொடுத்து வருகின்றேன். இது இனிவரும் காலங்களிலும் தொடர்ந்தவண்ணமேயிருக்கும். எனது இந்தச் சேவை எந்தவித அரசியல் இலாபங்களுக்காகவும் இல்லையென்பதை உறுதியாகக் கூறிக்கொள்கின்றேன்.

தமிழ் மக்களாகிய தங்களில் எவருக்கேனும் ஏதாவது அநீதியான செயல் ஏற்பட்டிருந்தால் அது தொடர்பாக டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன (நா.உ), இல.26B, சமிட் பிளட்ஸ், ஜாவத்த வீதி, கொழும்பு -05 என்ற முகவரிக்கோ 0777 304308, 0114527297 என்ற தொலைபேசி இலக்கங்களூடாகவோ 0112507799 என்ற தொலைநகல் இலக்கம் மூலமோ அல்லது doctorjayalath @yahoo.com என்ற ஈமெயில் முகவரியூடாகவோ தொடர்புகொண்டு எனக்கு அறியத் தரலாம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (202)

## சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொல்.திருமாவளவன், கி.வீரமணி கைது

சென்னை,டிசெ.13

'தலித்' மக்களை (தாழ்ந்தசாதி) இழிவுபடுத்தும் வகையில் குஜராத் மாநில முதல்வர் நரேந்திரமோடி நூல் வெளியிட்டமையைக் கண்டித்துச் சென்னையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் போது திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உட்பட 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோடி எழுதிய 'தர்மயோக்' என்ற நூலில் 'மலம் அள்ளுவது யோக நிலையை அடைவதற்குச் சமம். அந்தப் பணி, கடமையாற்றுபவருக்கும், கடவுளுக்கும் மகிழ்ச்சி கொடுக்கக் கூடியது' - என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் கருத்தைக் கண்டித்து திராவிடர் கழகமும், விடுதலை சிறுத்தைகள் கட்சியும் இணைந்து சென்னை, மெமோரியல் மண்டபம் முன்பாக நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டப் போராட்டத்தை நடத்தின.

போராட்டத்திற்கு திராவிடர் கழகத் தலைவர் வீரமணி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோர் தலைமை வகித்து, மோடி எழுதிய நூலின் பிரதியைத் தீயிட்டுக்கொளுத்தினர். அப்போது அவர்கள் இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

# ஈழத்தமிழ் அகதிகள் ஊடாக வெடிமருந்து கடத்தலா?

சென்னை,டிசெ.13

அகதிகளாகத் தமிழகம் வந்து முகாம்களில் தங்கியிருக்கும் ஈழத்தமிழர்கள் மூலம் புலிகளுக்கு வெடிமருந்துகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன எனத் தமிழக நாளேடுகள் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பொலிஸாரை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்டிருக்கும் இந்தச் செய்திகளில் -

கடந்த செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி கேரள மாநிலம் திருச்சூரிலுள்ள சக்தன் பஸ் நிலையத்தில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு ஒரு பை கேட்பாரற்று அனாதையாகக் கிடந்தது. இதனால் சந்தேகம் அடைந்த பொலிஸார் அந்தப் பையைப் பறிமுதல் செய்து அதை திறந்து பார்த்தபோது உள்ளே பத்தாயிரம் 'டெட்டனேட்டர்கள்' இருந்தன. இவை வெடிகுண்டுகள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுபவையாகும். இதனால் அதிர்ச்சி அடைந்த பொலிஸார் இவற்றைக் கடத்தியது யார் என்று தீவிர விசாரணைகளை நடத்தினர்.

விசாரணையில் இவற்றைக் கடத்தியவர் கோழிக்கோட்டையைச் சேர்ந்த வியாபாரி நஜீப் (வயது-52) எனத் தெரியவந்தது. திருச்சூர் நீதிமன்றத்தில் சரணடைந்த அவரைப் பொலிஸ் காவலில் எடுத்து தீவிர விசாரணை நடத்தியபோது, விடுதலைப் புலிகளுக்கு வெடிகுண்டு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் 'டெட்டனேட்டர்'களை கடத்தியதை ஒப்புக்கொண்டார்.

இந்த 'டெட்டனேட்டர்'களை நான் இராமேஸ்வரம் கடத்திச் சென்று அங்குள்ள இலங்கை அகதிகள் முகாமிலுள்ள விஜி என்பவருக்கு விற்று வந்தேன் எனக் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

விஜிக்கு மட்டும்தான் வெடிபொருட்களை நஜீப் விநியோகம் செய்து வந்தாரா? மேலும் பல இலங்கை அகதிகளுக்கும் அல்லது நக்சலைட்டுகள் மற்றும் தீவிரவாதிகளுக்கும் விற்று வந்தாரா என்ற கோணத்திலும் தீவிர விசாரணைகள் நடைபெற்று வருகிறது- என்று நாளேடுகள் தெரிவித்துள்ளன. (சி)



தள்ளமாக இருந்துகொண்டு திரைப்படத்தில் கதாநாயகனாக நடித்திருந்த நடிகர் அஜய்குமாரின் பெயர் 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. இதையடுத்து கேரள மாநிலத்தில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் கலந்துகொண்டு அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் குள்ள நண்பர்கள்.

# நெருக்கடி தரப்போகும் பருவநிலை மாற்றம்; உலக நாடுகளுக்கு ஐ.நா. எச்சரிக்கை!

பாலி, டிசெ.13

எதிர்காலத்தில் நாடுகளுக்கு இடையே மோதல் ஏற்படுவதற்கும் உலகம் முழுவதும் பதற்றம் அதிகரிப்பதற்கும் பருவநிலை மாற்றம் காரணமாக அமையும் என ஐ.நா.சுற்றுச்சூழல் அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்தோனேசியாவின் பாலித் தீவில் நடைபெற்றுவரும் பருவநிலை மாற்றம் தொடர்பான உச்சி மாநாட்டில் உலகம் முழுவதும் இருந்து அமைச்சர்கள், விஞ்ஞானிகள், பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பல்லாயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

பருவநிலை மாற்றத்திற்கு முக்கிய காரணமான கார்பன்-டை-ஒக்சைட் வாயுவை வெளியேற்றுவதை ஒவ்வொரு நாடும் குறைத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம்.

இந்த மாநாட்டையொட்டி பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதைத் தடுப்பதற்கு எடுக்கவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உலக நாடுகளை ஐ.நா.சுற்றுச் சூழல் அமைப்பு அறிவுறுத்தியுள்ளது.

பருவநிலை மாற்றத்தால் உலகில் நீர் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஏற்படும். அதனால் இடம்பெயர்வோர் எண்ணிக்கை அதிகமாகி சுற்றுச்சூழல் அகதிகள் தோன்றுவார்கள் எனவும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. (50)

## சடலங்களைப் பொறுப்பேற்கக் கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலையில் இதுவரை உரிமை கோரப்படாத நிலையிலுள்ள இரு சடலங்களை 5 நாள்களுக்குள் பொறுப்பேற்குமாறு உரித்துடையவர்களை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி மரணமான கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த எஸ்.செல்லத்துரை (வயது -65) என்பவரதும் கடந்த 6ஆம் திகதி மரணமான வேம்படி முருகன் கோயிலடி, கொக்குவிலைச் சேர்ந்த முருகையா சின்னத்தம்பி என்பவரதும் சடலங்களே உரிமை கோரப்படாத நிலையில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (202)

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம்,டிசெ.13

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வைகுண்ட ஏகாதசி கொடியேற்றம் நேற்று நடைபெற்றது.

எதிர்வரும் 20ஆம் திகதி காலை 5 மணிக்கு சுவர்க்கவாசல் தரிசனமும் முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழா மறுநாள் காலை சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக் கரையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (202-28)

* * *

தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை பூர்த்தியும் கஜமுகாசுர சங்காரமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு விநாயக விரத இலட்சார்ச்சனை பூர்த்தியும் பிற்பகல 2 மணிக்கு கஜமுகாசுர சங்காரமும் இடம்பெறவுள்ளன. (202-288)

* * *

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாரயணர் ஆலய சுவர்க்க வாயில் ஏகாதசி திருவிழா எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகி முற்பகல் 11 மணியளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் அதிகாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

## முதுகலைமாணி கற்கைக்கு 150 மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,டிசெ.13

அடுத்த ஆண்டு யாழ்.பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடத்தின் ஊடாக 150 முதுகலைமாணி மாண்வர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான நேர்முகப் பரீட்சை விரைவில் இடம்பெறவுள்ளது.

முதுமாணியில் அபிவிருத்தி, முதுமாணியில் பிரதேச திட்டமிடல், முதுமாணியில் குடித்தொகை ஆகிய மூன்று முதுமாணி அபிவிருத்தி கற்கை நெறிகளுக்கே மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

திணைக்களங்களில் கடமையாற்றும் அலுவலர்கள் திணைக்களத் தலைவரூடாக விண்ணப்பம் செய்யவேண்டும்.

ஆகக்குறைந்தது 5 வருடங்கள் சேவையாற்றுவோர் மேற்படி கற்கைநெறிகளில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (202-95)

## வைத்திய அதிகாரி நியமனம்

பருத்தித்துறை, டிசெ.13

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் பதில் மாவட்ட வைத்திய அதிகாரியாக பல் வைத்திய நிபுணர் கலாநிதி எஸ்.ஜெயராஜா பொறுப்பேற்றுள்ளார்.

இவ் வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரியாகப் பணியாற்றிய வைத்திய கலாநிதி எஸ்.கதிரவேற்பிள்ளையின் சேவை பூர்த்தியடைந்ததையடுத்தே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (202-218)

## நம் மனச்சாட்சியே நமக்குத் தெய்வம்

*மனச்சாட்சியே அன்பு மயமான தெய்வம். இறைசக்தியே மனிதனிடம் பௌதிக சக்தியாகவும் மனோ சக்தியாகவும் ஆத்ம சக்தியாகவும் திகழ்கிறது. ஆத்மசக்தியே சத்சித் ஆனந்தம் என்பது. இதுவே மனச்சாட்சி எனப்படுவது. இது இறைவனின் சாட்சி. இது அன்பு மயமானது.*

*குழந்தை பிறந்ததும் தாயை நேசிக்கிறது. பின்பு தந்தை, உடன் பிறந்தோர், உற்றார், உறவினர் என்று பலரிடமும் அன்பு பாராட்டத் தொடங்குகிறது. இது இயற்கையை நேசிக்கும் அளவிற்கு விரிவடைகிறது. இந்த அன்பை எண்ணங்களிலும் சொற்களிலும் செயல்களில் வெளிக்காட்டலாம். இந்த அன்பையே ஆதிசங்கரர் அத்வைத பிரேமை என்று குறிப்பிட்டார். இதைப் புரிந்துகொள்வது பலருக்குக் கடினமாக இருக் கும். இதை ஓர் உதாரணம் மூலம் விளக்கினால் எளிதாகப் புரியும். கரும்பானது வடிவத்தில் பல கோணல்களும் கணுக்களும் கொண்டு காணப்படுகிறது. ஆனால் அதன் எந்தப் பாகத்தை நறுக்கிப் பிழிந்தாலும் ஒரே மாதிரியான இனிய சுவையுள்ள சாறு கிடைக்கிறது. இதேபோல் உலகில் எவ்வளவு வடிவங்கள் வேறு வேறாகத் தோன்றினாலும் உள்ளே உள்ள தெய்வீகம் என்ற சாறு ஒன்றே தான். இதைத்தான் ''சர்வபூத அந்தராத்மா'' எல்லா உயிரினங்களிலும் உள்ளே உள்ள ஆத்மா என்ற ஆத்ம தத்துவம் என்று சங்கரர் குறிப்பிடுகிறார்.*



சாயி சிந்தனை



சத்தியசாயி பாபாவின் அவதார தின விழா அண்மையில் மானிப்பாய் சத்தியசாயி சேவா நிலையத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் நிலையத்தின் தலைவரான பசுமைப் புரட்சியாளர் வை.செகராஜசிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் ஆகியோர் உரை நிகழ்த்துவதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: ரமேஸ்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்



13 . 12 . 2007

அபிசன்





சக்கோட்டையில் வசிக்கும்
தவமனோகரன் - துஷியந்தி தம்பதியரின்
செல்வப் புதல்வன் **அபிசன்** இன்று (13.12.2007)
வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை
சக்கோட்டையில் உள்ள தனது இல்லத்தில் வெகு
சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா,
பேரன்மார், பேர்த்திமார், சித்தப்பாமார், சித்திமார்,
மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சான்மார்,
அக்காமார், பூட்டன், பூட்டிமார் மற்றும் உற்றார்,
உறவினர்கள் ஆகியோர் சீரும் சிறப்புடனும் வாழ
வாழ்த்துகின்றனர்.

துரைவதி பவனம்,
அல்வாய் வடமத்தி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(68811)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



13 12 2007

**கிரிதரன்- யாளினி** தம்பதியரின்
செல்வப் புதல்வன் **பானுஜன்**
முதலாவது பிறந்ததினத்தை இன்று (13.12.2007)
வியாழக்கிழமை கனடாவில் தனது இல்லத்தில் வெகு
விமர்சையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு
அம்மா, அப்பா, அப்பம்மா, சசிமாமா, மாமி, சுதன்
சித்தப்பா, சித்தி, பூட்டன், பூட்டிமார், பெரியப்பா,
பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார் மற்றும்
உறவினர்கள் திருகோணமலையைச் சேர்ந்த
தபேஸ் மாமா, பிறவுண் றோட்டைச் சேர்ந்த
பூட்டி, சித்தப்பா, சித்தி, வித்தகன்,
லதாங்கி, நீர்வேலியைச் சேர்ந்த அம்மப்பா,
அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மாமார்,
அக்காமார், அண்ணாமார்,
உரும்பிராயைச் சேர்ந்த உற்றார்,
உறவினர்கள் அனைவரும் நீர்வேலி
அரசகேசரிப்பிள்ளையார்
அருள்பெற்று இவரை
பல்கலையும் கற்றுப்
பல்லாண்டு காலம் வாழ
வாழ்த்துகின்றனர்.

**கணபதிப்பிள்ளை
குடும்பம்.**

பானுஜன்

(68636) நீர்வேலி தெற்கு.


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

941 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம்

**17 28 33 41**

**11-12-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4484044 - 4499441

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 336,606 | 10/- | 3,366,060/- |
| 2 இலக்கங்கள் | 30,898 | 20/- | 617,960/- |
| 1 இல. + லக்கினம் | 30,558 | 30/- | 916,740/- |
| 2 இல. + லக்கினம் | 2,827 | 100/- | 282,700/- |
| 3 இலக்கங்கள் | 810 | 500/- | 405,000/- |
| 3 இல. + லக்கினம் | 93 | 5,000/- | 465,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| மொத்தம் | | | 7,453,460/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 401,802 | | 8,476,960/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இல. 3372329 க்கு மேற்பட்ட சீவ்பு நிற டிக்கட்டுக்கள் 2007 டிசெம்பர் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறாத டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில்
முச்சக்கரவண்டி வெற்றி பெறும்
ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 4490050-3-63 |
| காலி | 4496991-1-14 |
| புத்தளம் | 4491046-9-98 |
| அம்பாறை | 4487316-9-75 |
| கொழும்பு | 4484839-0-73 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செண் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## உணவு விநியோகம்; செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.13

குடாநாட்டின் உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

பொருள் இருப்பு, கணக்கு விவரம் ஆகியவற்றுடன் சமூகமளிக்குமாறு அவர்களை அரச அதிபர் கோரியுள்ளார். (1)

## வலி.கிழக்கில் தரவைகளில் ஊரி எடுப்பதற்குத் தடை

யாழ்ப்பாணம், டிசெ.13

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தரவைகளில் மழைகாலம் முடியும் வரை ஊரி எடுப்பதைத் தடுக்க வேண்டுமென பிரதேச செயலக சுற்றுச் சூழல் உத்தியோகத்தர் இ.சுரேந்திரநாதன் தெரிவித்துள்ளார்.

தரவைகளில் ஊரியெடுப்பதனால் நீர் அரிப்பு இருப்பதாகவும் அத்துடன் அந்த இடங்களில் நீர் தங்கி நுளம்பு பெருக வாய்ப்பு இருக்கிறமையாலும் மழை காலம் முடியும் வரை ஊரியெடுப்பதை தடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (202-160)

## அதிபர்களுக்கான கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், டிசெ.13

தீவகக் கல்வி வலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அதிபர்களுக்கான கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என வலயக் கல்வி பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் தெரிவித்தார். (202)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம்
22 . 09 . 1931

மறைவு
25 . 11 . 2006

## அமரர் Dr. சின்னத்தம்பி கணேஸ்

திதி: 14.12.2007

நாளை (14.12.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(68887)

11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. - குடும்பத்தினர்.

## கார் விற்பனைக்கு

13 ஜி XXXX தொடர் இலக்க மிட்சுபிசி கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:

**கணேகு கராஜ்,**
பலாலி வீதி, திருநெல்வேலி.

(68904)

## பெயர் மாற்றம்

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த நன்னித்தம்பி நவரத்தினம் ஆகிய நான் இன்று (13.12.2007) வியாழக்கிழமை முதல் எனது பெயரை நன்னித்தம்பி லாசரஸ் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

நன்னித்தம்பி லாசரஸ்.

(68899)

## தவறிவிட்டது

ஏழாம், 6 ஆம் வட்டாரம் (ஊரதீவு), புங்குடுதீவைச் சேர்ந்த இராசையா கந்தசாமி என்பவருடைய தே.அ.அட்டை இல. (592945932V) சீனியர் லேனுக்கும், கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

**18, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.**
T.P.: 0776146115.

(68896)

## விற்பனைக்கு

கைலாச வாகனம்

எமது தேவஸ்தானத்தில் பாவனையிலிருந்த கைலாசவாகனத்தை விற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தேவஸ்தான வாகனசாலையில் வாகனத்தைப் பார்வையிடலாம். வழங்க முன்வரும் தொகையைக் குறிப்பிட்டு, ஒப்பமிட்ட உறையில், 25.12.2007 இற்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்.

**தலைவர்,**
யாழ்.அரியாலை நீர்நொச்சித்தாழ்வு
ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம்.

(68897)

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 13.12.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* **ராஜீவ்** - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
* **மதுரா** - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
* **P.ரவி** - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* **திருமகள் களஞ்சியம்** - [illegible]
* **சிற்றி பாம் ஹேசரீஸ்** - கல்வியங்காடு.

(68877)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி ஞானேஸ்வரி தர்மலிங்கம்



திதி: 15.12.2007

மலர்வு
16 . 07 . 1935

உதிர்வு
24 . 11 . 2006

அன்பின் பிறப்பிடமாய்...
ஆசையின் உறைவிடமாய்...
எமை ஈன்ற அன்னையே...!
ஏணியாய் நின்று எமை உயர்த்தினாய்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

'தர்மவாசம்'
முத்தட்டி மட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

பிறப்பு
25 . 06 . 1945



இறப்பு
13 . 11 . 2007

## திருமதி பரமநாதன் புஸ்பராணி

**அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்து - எமை
அவனியிலே மேன்மையுடன் வாழவைத்த அன்னையே!
இவ்வுலகம் விட்டு அவ்வுலகம் சென்று வாழ்கின்ற - உமை
நாள்கள் முப்பத்தொன்று கடந்தாலும் நினைந்து வணங்குகின்றோம்.**

கடந்த 13.11.2007 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி அமரர் பரமநாதன் புஸ்பராணி அவர்களின் மரணச் செய்தி அறிந்து தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் நேரிலும் ஆறுதல் கூறியோருக்கும் இறுதிச் சடங்கில் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (13.12.2007) வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு நீர்வேலியில் அவரது இல்லத்தில் இடம்பெறும். அத்தருணம் நிகழவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

கா.சந்திரநாதன் (குட்டி)
குடும்பத்தினர்.

(68869)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## விதைத்த வினையை மறந்து விளக்கம் கூறும் வித்தகர்கள்

கொழும்பில் தனது பணியை முடித்து, அமெரிக்காவின் வாஷிங்ரனில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் பிரதித் தூதுவர் மட்டப் பதவியை ஜனவரியில் ஏற்றுக் கொள்வதற்காக அங்கு புறப்பட முன்னர், கடந்த திங்களன்று - சர்வதேச மனித உரிமைகள் நாளில் - இங்கு தலைநகரில் இடம்பெற்ற முக்கிய ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் சில கருத்துகளை முன்வைத்திருக்கிறார் கொழும்புக்கான பிரிட்டிஷ் தூதுவர் டொமினிக் சில்க்கொட்.

அவரது உரையில் முக்கிய கருத்து ஒன்றே பலராலும் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது.

*"ஈழம் என்ற தனிநாட்டுக்கான அரசியல் அபிலாசை சட்டமுறையற்றது என நான் கூறவில்லை. ஆனால் அதற்காகப் பயன்படுத்தப்படும் முறைதான் முக்கியமானது. புலிகள் அதற்காக மேற்கொள்ளும் முறை ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல."* - என்று தத்துவம் போதித்திருக்கின்றார் விடைபெற்றுச் செல்லும் பிரிட்டிஷ் தூதுவர்.

இந்த உபதேசத்தை வேறு யாராவது இராஜதந்திரி கூறியிருந்தால் அது வேறு விடயம். இதை பிரிட்டிஷ் தூதுவரே இங்கு வந்து பெரும் அளப்பாக எடுத்துரைப்பதைத்தான் பொறுக்க முடியவில்லை; சகிக்க இயலவில்லை.

தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையை சட்டமுறையற்றது என நாம் கூறவில்லை என்ற அளவுக்கு பிரிட்டன் தன்னைத் திருத்திக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அந்த இலக்கை எட்டுவதற்குத் தமிழர் தரப்பு நடத்தும் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, விமர்சிக்கும் தகுதியும், அருகதையும் பிரிட்டனுக்கோ, அதன் இராஜதந்திரிகளுக்கோ அடிப்படையில் இல்லை என்பதுதான் இங்கு கவனிக்கத்தக்கது.

இலங்கைத் தீவில், தமிழர் தேசத்துக்கான இந்த விடுதலைப் போராட்டத்தினால் இவ்வளவு இரத்த ஆறு ஓடி, இவ்வாறு பெருமளவில் உயிர், உடைமைகள் அழிந்து, முழுத் தீவுமே கொடூர யுத்தத்தில் சிக்கி அல்லலுறுகின்றது என்றால் அந்த முரண்பாட்டுக்கு வித்திட்டு வழி சமைத்ததே பிரிட்டிஷ் காலனித்துவம்தான் என்பதை மறந்து - மறைத்து - பேசுகின்றாரோ பிரிட்டிஷ் தூதுவர்?

தேசங்களின் மீதும் தேசியங்களின் மீதும் ஆக்கிரமிப்பு மூலமான தனது சுரண்டல் புத்தியை சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் வெள்ளைக்காரக் காலனித்துவம் - பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் - இங்கு காட்டிய சமயம் இலங்கைத் தீவு எப்படி இருந்தது?

வெவ்வேறான மொழி, கலாசாரம், வாழ்வியல் முறை, வரையறை செய்து பிரிக்கப்பட்ட - தெளிவான - தொடர்ச்சியான - தனித்தனியான - தாயகப் பிரதேசங்கள் என்ற அடிப்படைகளோடு தமிழர் தேசமும், சிங்களவர் தேசமும் நீண்ட நெடுங்காலமாக இலங்கைத் தீவில் தனித்தனியாகவே அரசோச்சி வந்தன.

இந்தத் தீவை ஆக்கிரமித்த போர்த்துக்கீசரும் சரி, ஒல்லாந்தரும் சரி இந்த இரண்டு தேசங்களினதும் இறைமைகளையும், தனித்துவங்களையும் மதித்து, வேறுபடுத்தி, தனித்தனியாகவே அவற்றை ஆட்சி செய்தனர்.

ஆனால் பின்னர் அவர்களிடமிருந்து இலங்கைத் தீவை ஆயுத பலத்தால் பிடுங்கிக்கொண்ட பிரிட்டன், தன்னுடைய நிர்வாக வசதிக்காக தமிழர் தேசத்தையும், சிங்களவர் தேசத்தையும் 1833 இல் ஒன்றுபடுத்தி - ஒன்றுபட்ட ஆளுகைக்குள் - அவற்றைக் கொண்டுவந்த போதுதான் தமிழர் தேசத்தின் இறைமை, சிங்கள தேசத்தின் இறைமையுடன் கலந்து அதன் கீழ் மடங்கிப்போகும் துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

அதன்பின்னர் சர்வதேச உலகில் ஏற்பட்ட பல்வேறு அழுத்த நெருக்கடிகளால் தூர தேசங்களில் தனது ஆக்கிரமிப்பையும் சுரண்டலையும் துறக்கவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளான பிரிட்டன், அப்போது அதுவரை தான் கைப்பற்றி வைத்திருந்த தமிழர் தேசத்தின் இறைமையை, சிங்கள தேசத்துடன் பிணைத்தபடி, இந்தத் தீவின் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் கையளித்து - சிறை வைத்து - சென்றது. அதன் விளைவைத்தான் வினையாக இந்தத் தீவு இன்றும் அறுத்துக்கொண்டு இருக்கின்றது.

இந்தப் பின்னணியைப் புரியாமல் பேசுகிறார் பிரிட்டிஷ் தூதுவர்.

தமிழர் தேசத்தின் இறைமையை மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் வல்வந்தமாக பிரிட்டன் பிடுங்கியபோது - ஆக்கிரமிப்பு செய்தபோது - அதை பேச்சு மூலமா அல்லது மென்போக்கிலா பிரிட்டிஷ் முன்னெடுத்தது? பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தனது படை வலிமைச் செருக்கைப் பல்லாயிரம் கடல் மைல்கள் கடந்து இந்தத் தீவின் மீதும் ஏவி விட்டே - பிரயோகித்தே - ஆயுத முனையில்தான் அதைக் கைப்பற்றியது.

தமிழர் தேசத்தின் இறைமையைக் கைப்பற்றித் தனது ஆளுகைக்குள் வைத்திருந்த காலத்திலும் சரி, பின்னர் அதை சிங்கள தேசத்திடம் சிறை வைத்தமை முதல் இன்று வரை, ஆட்சி அதிகாரத்தின் ஆயுத வலிமைக்குள்தானே தமிழரின் இறைமை சிக்கிக் கிடக்கின்றது......?

அதனை மீட்பதற்கு, தனக்கு நியாயம் பெறுவதற்கு, இன்று பிரிட்டிஷ் தூதுவர் போற்றுகின்ற வன்முறையற்ற - அஹிம்சை வழியிலான - போராட்டப் பாதையில் தமிழர் தேசம் சுமார் மூன்றரை தசாப்தங்கள் போராடியபோது, அது சிங்கள தேசத்தினால் ஆயுத வலிமை மூலம் - படைப் பலாத்காரம் மூலம் - முறியடிக்கப்பட்ட போது, சிங்கள தேசத்திடம் தமிழர் தேசத்தின் இறைமையைச் சிறைப் பறவையாக ஒப்படைத்துச் சென்ற வெள்ளைக்கார தேசம் என்ன செய்தது? குறைந்த பட்சம் தமிழர்களுக்காக - அவர்கள் பக்கத்தில் இருக்கும் நியாயத்துக்காக - குரல் கொடுக்கவேனும் முன்வந்ததா?

தான் தமிழர் தேசத்திடமிருந்து ஆயுத முனையில் - வல்வந்தமாக - பிடுங்கிக் கொண்ட இறைமையை, இப்போது மீட்பதற்காகத் தமிழர் தேசம் வேறு வழியின்றி - கடைசி மார்க்கமாக - அதே பாதையைத் தேர்ந்தெடுக்கும்போது, அது ஏற்றுக்கொள்ள முடியாதது என்று பிரிட்டன் கூறுவது எங்ஙனம் நியாயம்?

'மயிலே, மயிலே இறகுபோடு!' என்று கேட்டு, இறைஞ்சிப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று தமிழர் தேசத்துக்கு சிபார்சு செய்வது அங்கு வாழ்பவர்கள் முட்டாள்கள் என்ற நினைப்புடனா?

# தமிழ்-சிங்கள மக்கள் சம உரிமையுடன் வாழ சமயத் தலைவர்கள் உந்துதல் தரவேண்டும்

## நல்லை ஆதீன முதல்வர் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,டிசெ.13

தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் சம உரிமை உள்ளவர்களாக வாழ்வதற்கு வழி செய்யப்படவேண்டும். அதற்கான தீர்வுக்கு வகைசெய்ய சமயத் தலைவர்கள் உந்துதலாகச் செயற்படுவது அவசியம்.

இவ்வாறு நேற்றைய சர்வதேச சர்வ மதத் தலைவர்களின் மாநாட்டில் வலியுறுத்தினார் நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்.

சர்வமதத் தலைவர்கள் இணைந்து சமாதானத்தை உருவாக்குவது குறித்து ஆராய்வது நல்லமுயற்சி. இது இதய சுத்தியுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும் -

குடாநாட்டில் தடுப்பார் இன்றி நாளாந்தம் படுகொலைகள், கடத்தல்கள், கொள்ளைகள், கப்பம் கோருதல் என்று ,பயங்கரமான சூழலில் மக்கள் வாழ்கின்றனர். இதற்கு முடிவு கட்டுவதற்கு சர்வமத் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து குரல்கொடுப்பது அவசியம் -

தமிழ்மக்கள் என்றும் துன்பப்பட்டு வாழும் நிலையே தொடர்கிறது. அல்லற்பட்டு அல்லற்பட்டு அதிலிருந்து விடபடமுடியாதவர்களாக வேதனையோடும் விரக்தியோடும் வாழ்கின்றார்கள் - என்றும் ஆதீன முதல்வர் குறிப்பிட்டார்.

மௌலவி அல்ஹாஜ் நியாஸ் முகம்மது பேசுகையில் -

1977ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகத்தில் பரீட்சை எழுதுவதற்காக இந்த நூல் நிலையத்தை நான் பயன்படுத்தினேன். அப்போது யாழ்ப்பாண மக்கள் துடிதுடிப்புடனும் சுறுசுறுப்புடனும் இயங்கினார்கள். ஆனால் இப்போது எல்லோரும் சுருண்டு கிடக்கிறார்கள். ஆசியாவின் சுவர்க்கம் எனக் கருதப்படும் எமது நாட்டில் இப்போது இரத்த ஆறு ஓடுகிறது. இந்த நிலை தொடரவேண்டுமா? யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தைக் கொண்டுவர எல்லோரும் மனதார உழைக்கவேண்டும்.

நேற்றைய அமர்வுகளின்போது ஆகக்கூடிய அதிகார பகிர்வின் அவசியம் குறித்து ஆயர்களும் பௌத்த குருமார்களும் தமது உரைகளின் போது வலியுறுத்தினர். (அ-120)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்கிறார்கள் என்றும், உறவினர்களைச் சந்திக்கச் செல்கிறார்கள் என்றும் கூறிவிட்டு வெளியில் கிளம்பிச் செல்கின்றனர். இவர்கள் மூலமாகவும் கடற்புலிகளின் நடவடிக்கை அவர்களைச் சந்திக்கும் முறைகள் குறித்து தகவல் பரிமாற்றங்கள் நடந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் கிளப்பியுள்ள நிலையிலேயே இந்தச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகக் கூறப்படுகின்றது.

தமிழக முகாம்களில் தங்கியுள்ள அகதிகளைப் பார்ப்பதற்காக அவரது உறவினர்கள் போர்வையில் கடந்த 3 மாதத்தில் யார் யார்? வந்து சென்றனர் என்பது குறித்து விசாரிக்கும்படி 'கியூ' பிரிவுப் பொலிஸாருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது.

கடற்புலிகளின் முகவர்களிடம் விசாரித்தபோது, அரசியல் கட்சிப் பிரமுகர் ஒருவர் அவர்களுக்கு உதவியுள்ளது தெரிய வந்துள்ளது. ஏற்கனவே இதே பிரச்சினையில் கைது செய்யப்பட்ட அவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டவராவார். அவரிடம் மீண்டும் விசாரணை நடத்தப்படும். மேலும் புலிகளுக்கு ஆதரவுக் குரல் கொடுத்து வரும் அமைப்புகளின் நடவடிக்கையும் கண்காணிக்கப்பட்டு வருகிறது - என்று 'கியூ' பிரிவின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

## அரசிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்கள், முயற்சிகள் எதிரணியால் முடுக்கி விடப்பட்டிருக்கும் பின்னணியில் -

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் இவ்விவகாரத்தில் தான் பின்பற்ற வேண்டிய நிலைப்பாடு குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது. கட்சிக்குள் நேற்றும் பல சுற்றுப்பேச்சு கள் நடைபெற்றன.

அரசைத் துறந்து எதிரணிப் பக்கம் போகும் முடிவுக்கு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் உட்பட இ.தொ.காவின் முக்கிய தலைவர்கள் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றனர்.

பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கம், எம்.எஸ்.செல்லச்சாமி ஆகிய இருவரும் அரசிலிருந்து இந்தச் சமயத்தில் வெளியேறும் முடிவுக்குக் கடும் எதிர்ப்புக் காட்டி, அதற்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர் என்று இ.தொ.கா. உள்வீட்டு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால், வரவு - செலவுத்திட்டத்தை ஆதரிப்பதா, இல்லையா என்பது தொடர்பான இ.தொ.காவின் முடிவு நாளை நாடாளுமன்ற வாக்கெடுப்பு இடம்பெறும் சமயம் வரை 'சஸ்பென்ஸனாக' நீடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (சி)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 28 | வெள்ளிக்கிழமை 14.12.2007 |
| திதி : பஞ்சமி | பி.இ 02.53 |
| நட்சத்திரம் : | திருவோணம் பி.ப 05.45 |
| சுபநேரம் | : 06.21 - 07.51 |
| ராகுகாலம் | : 10.51 - 12.21 |

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியினரோ அமைதியாகப் பார்த் துக் கொண்டிருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த பிரமுகர்களில் ஒருவரான லக்ஷ்மன் கிரியெல்ல தமது ஆசனத்தை விட்டு எழுந்து போய் ஹக்கீமை கைலாகு கொடுத்து வரவேற்றதோடு, தமது ஆசனத்தையும் ஹக்கீமுக்கு வழங்கி பெருமனதுடன் நடந்து கொண்டார்.

இந்த நால்வரும் அணி மாறிய போதும், இதுவரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் எஞ்சியிருந்த மற்றைய இரு பிரதியமைச்சர்களான பாயிஸும், நிஜாமுதீனும் நேற்று நாடாளுமன்றத்தில் அச்சமயம் பிரசன்னமாகியிருக்கவில்லை. அவர்கள் தொடர்ந்தும் அரசில் நீடிக்கவே விரும்புகின்றார்கள் என அவர்களுடன் தொடர்புடைய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (சி)

## புலிகளே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இப்படிக் கூறினார்.

நேற்றுக்காலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரின் உறவினர்களைப் பிள்ளையான் குழுவினர் அரச அனுசரணையுடன் கடத்தி உள்ளனர் என நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது.

ஆனால் எமக்குக் கிடைத்த தகவலின் படி கிழக்கு மாகாணத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 14 ஆம் திகதி வரவு - செலவுத்திட்ட மூன்றாவது வாசிப்பின்போது அரசுக்கு ஆதரவளித்து வாக்களிக்கத் தீர்மானித்துள்ளனர். இதனால் ஆத்திரமடைந்த புலிகள்தான் இந்த உறுப்பினர்களின் உறவினர்களைக் கடத்தி வைத்துள்ளனர் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

கிழக்கில் புலிகளுக்கு எதிராக மக்கள் ஒன்று திரண்டுள்ளனர். கடந்த திங்களன்று அங்கு இவ்வாறு 15 ஆயிரம் பேர் ஒன்று திரண்டு புலிகளுக்கு எதிராகப் பேரணி ஒன்றை நடத்தினர் எனத் தெரிகின்றது - என்றும் அவர் கூறினார். (சி)

## கூட்டமைப்பின் மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீதான வாக்கெடுப்பின்போது இதே போன்று, மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு எம்.பியான ரி.கனகசபை யின் மருமகனைப் பிள்ளையான் குழு கடத்தி, இதேபோன்று நிபந்தனை விதித்துத் தடுத்து வைத்திருந்ததும் -

பிள்ளையான் குழுவின் அச்சுறுத்தலுக்குப் பயந்து கனசபை அன்றைய தினம் நாடாளுமன்றுக்குச் சமுகம் தராமல் ஒதுங்கிக் கொண்டமையும் -

அப்படி அவர் நடந்து கொண்டமையை அடுத்து அவரது மருமகன் உயிராபத்து ஏதும் ஏற்படுத்தப்படாமல் நலமே விடுவிக்கப்பட்டமையையும் - தெரிந்தவையே.

இப்போது பி.அரியநேத்திரன் எம்.பியின் மூத்தசகோதரரான பி.ஸ்ரீஸ்கந்தசெய (வயது - 54) என்பவரும் -

க.தங்கேஸ்வரி எம்.பியின் செயலாளரான இரா.நாகலிங்கம் அன்புமணி (வயது - 72) என்பவரும் -

ஜெயானந்தமூர்த்தி எம்.பியின் சகோதரியின் மருமகனான அருணாசலம் சிவபாலன் (வயது - 28) என்பவருமே கடத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களில், பி.ஸ்ரீஸ்கந்தசெய கிராம சேவை அலுவலர். நான்கு பிள்ளைகளின் தந்தை.

இரா.நாகலிங்கம் அன்புமணி ஓய்வு பெற்ற அரச ஊழியர்.

அருணாசலம் சிவபாலன் ஒரு பிள்ளையின் தந்தை.

சம்பந்தப்பட்ட எம்.பிக்கள் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக நாளை வாக்களித்தால் இந்த மூவரின் உயிருக்கும் ஆபத்து நேரும் எனப் பிள்ளையான் குழு எச்சரித்திருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## சமாதானச் செயற்பாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகளிலிருந்து 20 பேர் பங்குபற்றினர். அவர்களில் கம்போடியா, ஜப்பான், தென் ஆபிரிக்கா, அமெரிக்கா, பாகிஸ்தான், நோர்வே, இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத் தலைவர்கள் அடங்குவர்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகிய முதலாவது அமர்வுக்கு மகாத்மா காந்தியின் பேர்த்தி எலா காந்தி தலைமை வகித்தார். இவர் தென்னாபிரிக்காவில் இருந்து வந்தார்.

இந்த அமர்வில் ஸ்ரீஜெயவர்த்தனபுரப் பல்கலைக்கழக வேந்தர் வண. பேராசிரியர் பெள்வெல்ல விமலரத்தின தேரர், நல்லை திருஞான சம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், கண்டி ஆயர் யோசப் வின்னி பெர்னாண்டோ, கல்முனை இஸ்லாமிய அரபிக் கல்லூரியைச் சேர்ந்த மௌலவி அல்ஹாஜ் நியாஸ் முகம்மது ஆகியோர் ஆரம்ப உரைகளை ஆற்றினர்.

சர்வதேச பிரதிநிதிகளின் சார்பில் ஜப்பானைச் சேர்ந்த கலாநிதி மிச்சியோ ஷினோசாக்தியும் அமெரிக்காவைச் சேர்ந்த கலாநிதி வில்லியம் வென்ட்லியும் ஆரம்ப உரையாற்றினர்.

இரண்டாவது அமர்வு கலாநிதி வில்லியம் வென்ட்லி தலைமையிலும் மூன்றாவது அமர்வு வண. கலாநிதி பெலன்வில விமலரத்தின தேரர் தலைமையிலும் நடைபெற்றன.

இந்த அமர்வின்போது ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியின் பிரதான உரை இடம்பெற்றது.

எந்த விவகாரத்திலும் விட்டுக் கொடுத்துப் பெறும் மனப்பக்குவம் தேவை. சமாதானத்தை அடைவதற்கு அது மிகவும் பிரதானம். இலங்கையில் சமாதானத்தைக் கொண்டு வருவதில் ஜப்பானும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது.

எனினும் சமாதான நடவடிக்கைகள் இப்போது மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளன. அதனை நீக்குவதற்கு இரண்டு தரப்புகளிலும் மனமாற்றம் தேவை. இந்த மானமாற்றத்துக்கு பல துறை சார்ந்தோரின் ஆதரவும் தூண்டுதலும் தேவை. சமயத்தலைவர்கள் அதன் பொருட்டு உழைக்க முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். - என்று அகாசி தமது உரையில் குறிப்பிட்டார்.

நேற்றைய மாநாட்டில் ஐக்கிய இலங்கைக்குள் ஆகக்கூடிய அதிகாரப் பரவலுடனான தீர்வு குறித்து மாநாட்டில் கலந்துகொண்ட பௌத்த குருமாரும் ஆயர்களும் வலியுறுத்தினர்.

(அ-120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமத்தில் ஜி.ஐ.ரி. பரீட்சை நிலையங்கள் மாற்றம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.13

பரீட்சைத் திணைக்களத்தினால் இம் மாதம் 16ஆம் திகதி நட்த்தப்படவிருந்த க.பொ.த. உயர்தர பொதுத் தகவல் தொழில் நுட்பப் பரீட்சை (GIT) நிலையங்கள் இரண்டு மாற்றப்படவுள்ளதாக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மண்டப இலக்கம் 1, மானிப் பாய் இந்துக் கல்லூரிக்கும் மண்டப இலக் கம் 111, மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பரீட்சை நிலையங்களில் தோற்றுகின்ற பரீட்சார்த் திகள் இவ்விடயத்தினைக் கருத்திற்கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (அ)

# உயிர் அச்சுறுத்தலால் 6 குடும்பஸ்தர்கள் சரண்

யாழ்ப்பாணம்,டிசெ.13

தமக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து கடந்த இரண்டு நாள்களில் ஆறு குடும்பஸ்தர்கள் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் சரண் அடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையும் நேற்றுப் புதன் கிழமையும் மொத்தம் ஏழுபேர் மனித உரிமைகள் ஆணைக் குழு வின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர். அவர்களில் அறுவர் குடும்பஸ்தர்கள் ஆவர்.

புலவர் வீதி, நவாலியைச் சேர்ந்த 67 வயதுடைய 4 பிள்ளை களின் தந்தை, சரசாலை வடக்கைச் சேர்ந்த 57 வயதுடைய 6 பிள் ளைகளின் தந்தை, குருநகரைச் சேர்ந்த 36 வயதுடைய 2 பிள்ளை களின் தந்தை, சரசாலை மத்தியைச் சேர்ந்த 38 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை, மீசாலையைச் சேர்ந்த 33 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தை, மீசாலை தெற்கைச் சேர்ந்த 25 வயதுடைய 2 பிள்ளை களின் தந்தை, வரணி, இயற்றாலையைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஆகியோரே இவ்வாறு சரணடைந்துள்ள வர்கள் ஆவர்.

இவர்களைப் பாதுகாப்பாகத் தங்கவைப் பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை -

வி.எம்.றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த தில்லையம்பலம் சிவதாசன் (வயது 38 என்பவரை கடந்த பத்தாம் திகதி முதல் காணவில்லை என்று முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

நூலக உதவியாளரான இவர் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற பின்னர் காணா மற்போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ-50)

# திருமலையில் இருவரைக் காணவில்லை

திருகோணமலை சாம்பல் தீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளை களின் தந்தையும் அவரது நண்பர் ஒருவரும் விறகு வெட்டச் சென்ற பிறகு காணாமல் போயுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ண னிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என அவரது ஊடகப் பிரிவு விடுத்த செய் திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


BOC
இலங்கை வங்கி

**மீட்கப்படாத அடகு நகைகளின் பகிரங்க ஏல விற்பனை**

யாழ்.மாவட்டத்தில் உள்ள பின்வரும் இலங்கை வங்கி கிளைகளில் 31.08.2006 இற்கு முன்னர் 12 மாதங்களுக்கும் 28.02.2007 இற்கு முன்னர் 6 மாதங்களுக்கும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளன.

| கிளையின் பெயர் | ஏல விற்பனைத் திகதி, இடம், நேரம் |
|---|---|
| யாழ்.மேற்றரக் கிளை<br>யாழ். 2ஆம் மேற்றரக் கிளை | யாழ்.மேற்றரக் கிளை யாழ்ப்பாணம் 2007 டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி காலை 9.30 மணி |

இந்த ஏல விற்பனையை ஒன்றிணைக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி(வடபிராந்தியம்)
உதவிப் பொதுமுகாமையாளர் காரியாலயம்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
11.12.2007 021 222 3126, 021 222 2735



**Computer Classes - R.Kumaran - B.Sc.**
- ICT Grade 10/11 - Internet - Hard ware - Ms.Office - Linux - PHP - MySQL - VB.Net - ASP. Net - Oracle - SQL server - VB6 - Java - HTML - BIT-CBF/DBF
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு T.P: 0776577359

**2008 தரம் 11 இற்கான புதிய பாடத்திட்டம் விஞ்ஞானம்**
அலகு ரீதியான....
* குறிப்புகள் * பகுதி I,II வினாக்கள்
* விஞ்ஞான விளக்கங்களுடன்
அலகு 01 வெளிவந்து விட்டது. அலகு 02 மிகவிரைவில்...
ஆசிரியர்: மு.பிரியந்தன் (சயன்ஸ் அக்கடமி, அஸ்ரன்)
சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
T.P.: 0779994021

**A/L 2007, 2008**
**GIT**
எதிர்வரும் 16ஆம் திகதி தோற்ற இருக்கும் மாணவர்களின் எதிர் பார்ப்புக்கு ஏற்றவகையில் பிரபல விரிவுரையாளர்களின் ஒருங் கிணைப்பில்
மாதிரி வினாத்தாள்- விடைகளுடன்
கிடைக்குமிடங்கள்:
1) பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
2) திகழ் கல்வி நிறுவனம் கே.கே.எஸ். வீதி, இணுவில்
3) D.M.I யாழ்.நகர்
4) மொடேண்ஸ்ரோர்ஸ், நெல்லியடி
(மொத்தமாகப் பெற விரும்புபவர்கள் திகழ் கல்வி நிறுவனத்தில் தொடர்புகொள்ளவும். )

**IIS**
இக்கல்வி ஆண்டிற்கான இறுதிப்பிரிவு ஆரம்பம்.
அனைத்து Diploma
கற்கைநெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பிரிவு I :14.12.2007 } பகல் 10.00 மணி
பிரிவு II :15.12.2007
இயக்குநர், IIS,
இல.100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

**SUBRA (14)**
சித்தன்கேணி
**இரசாயனவியல்**
Paper Class
Basic and Thermo
Mon } 4.00 p.m. - 5.30 p.m
Fri
by: T.Pratheepan
B.Sc.(hons), Dip. in Edu.


## கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுத்தாபனத்தின் முன்னாள் உத்தியோகஸ்தரும் (Chief Pharmasist, Kolannawa) எமது காரியாலய பிராந்திய மேற்பார்வையாளர் திரு. இ.ஜெயபாலன் அவர்களின் தந்தையாருமாகிய

**தியாகராசா இராமலிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிராந்திய முகாமையாளரும்
சக ஊழியர்களும்.
பிராந்திய காரியாலயம்(வ)
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம். (68920)

## மரண அறிவித்தல்கள்

### கதிரேசு அருமைநாதன்

(உத்தியோகத்தர், பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகம், ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரரேசு அருமைநாதன் நேற்று (12.12.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.12.2007) வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*ஆனைக்கோட்டை வீதி,* குடும்பத்தினர்
*கொக்குவில் மேற்கு, கொக்குவில்* கஜேந்திரா(மகன்)

### இராமலிங்கம் சுப்பிரமணியம்

(முன்னாள் நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்)

கோப்பாய், நாவலடியைப் பிறப்பிடமாகவும் கைதடி, நாவற் குழியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சுப்பிரமணியம் 11.12.2007 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

• அன்னார் மாணிக்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நடனசபேசன், நளாயினி, நளினி, நந்தினி, அஞ்சலி அருந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருணகிரிநாதன், தர்மா, சவுந்தரராஜன், பிறேமதாசன் ஆகியோரின் மாமனாரும் சயந்தன், துசியந்தன், துசாந்தி, மயூரன், தாரணி, ஆரணி, அஸ்வினி, கௌதமன், சவுரியன், சாருகன், ராகுலன், ராயுதன், தனஞ்செயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2007) வியாழக்கிழமை மு.பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிணமுருங்கை இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கைதடி நாவற்குழி,* தகவல்:
*கைதடி.* (68926) மனைவி.

### பொன்னம்பலம் வீரகத்திப்பிள்ளை

(முன்னாளர் பிரபல வர்த்தகர், மட்டக்களப்பு)

மண்கும்பான் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வேலணை மணிய காரன் வீட்டடியை வதிவிடமாகவும் யாழ்ப்ப்பாணம் 3ஆம் குறுக் குத்தெருவை வதிவிடமாகவும் கொண்ட பொன்னலம்பலம் வீரகத்திப்பிள்ளை 05.12.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நரசிங்கம் தம்பதியரின் மருமகனும் தவமணி யின் அன்புக் கணவரும், வாசுகி(இந்தியா), வின்னிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் கிருஸ்ணவேணியின் அன்பு மாமனாரும் கணபதிப்பிள்ளை, இராசம்மா ஆகியோரின் சகோதர ரும் லாவண்யா, கரிஸ், இராகவி ஆகியேரின் அன்புப் பேரனும் லீலாவதி, காலஞ்சென்ற சாரதாம்பாள், அகிலாவதி, காலஞ்சென்ற ஆறுமுகம், ரகு, திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்ற தனபாலசிங்கத்தின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2007) வியாழக் கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*இந்தியா* வீ.தவமணி
*தொ.பே 00914465397057* (மனைவி)

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற சிறப்பர்)

பெருந்தெரு, புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த சின்னத் தம்பி சுப்பிரமணியம் நேற்று (12.12.2007) வியாழக்கிழமை இறை வனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அன்னப்பிள்ளை ஆகி யோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கத்தின் அன்புக் கண வரும் அருளானந்தம், மகேந்திரராஜா, சரஸ்வதி, காலஞ்சென்ற சுபத் திரா மற்றும் சகுந்தலா ஆகியோரின் அன்புத்தந்தையும் பரஞ்சோதி, இராசாம்பிகை, சறோஜினிதேவி(கால்நடை வைத்தியர், கரவெட்டி), செல்வானந்தராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் சுகிதா, கலை வாணி, துவாரகா, கனகாம்பிகை(ஆசிரியை), ஜெயராம்(பொறியி யலாளர்), றோகினி(விவசாய பீட மாணவி, முதலாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜீவசோதி விசாகரன்(மாணவன், ஹாட்லிக் கல் லூரி), காயத்திரி(மாணவி, வட இந்து மகளிர் கல்லூரி) ஆகியோ ரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(13.12.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந் தான் மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பெருந்தெரு,* தகவல்:
*புலோலி தெற்கு, புலோலி.* குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சங்கரன் வள்ளி

மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரன் வள்ளி நேற்று (12.12.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2007) வியாழக் கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் தெற்கு சின்னத்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.சுப்பையா J.P
(மருமகன் - ஓய்வுபெற்ற மின்சார சபை
*மட்டுவில் தெற்கு.* உத்தியோகத்தர்)



### முருகேசு இராசரத்தினம்

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட முருகேசு இராசரத்தினம் நேற்று (12.12.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சூரியகாந்தியின் கணவரும் காலஞ் சென்ற மகாலிங்கம் மற்றும் சிவலிங்கம் அரிய நாயகம் (கனடா), சறோயினிதேவி, சாரதாதேவி (பிரான்ஸ்), அருந்தவம் (ஜேர்மனி), காலஞ் சென்ற சூரியகலா ஆகியோரின் தந்தையும், தனலக்சுமி, விஜய மலர், ஜெயராணி (கிளி-கனடா), காலஞ்சென்ற சொக்கலிங்கம் மற்றும் நவரத்தினம் (பிரான்ஸ்), ஜெயசிங்கம் (ஜேர்மனி) ஆகி யோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.12.2007) வியாழக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி மாசிவன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு.* (68911) சிவலிங்கம்
(மகன் - கிளி)



### சோதிநாதன் சுதாகர்

உரும்பிராய் மேற்கு, கோகுல வீதி, கோண்டா விலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோதிநாதன் சுதாகர் நேற்று (12-12-2007) புதன்கிழமை அகாலமரணமா னார்

அன்னார் சோதிநாதன் - தில்லைநாயகி தம் பதியினரின் அன்பு மகனும் சுகந்தன், சோபனா (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிறீதரனின்(கனடா) மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13-12-2007) வியா ழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் .

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உரும்பிராய் மேற்கு ,* குடும்பத்தினர்.
*கோகுல வீதி,*
*கோண்டாவில்.*

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org